**செய்தி வெளியீடு எண்: 13/2021** **நாள்: 25.10.2021**

**<u>திருமங்கலம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்களில் 248 நபர்கள் பயணடைந்தனர்</u>**

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவின் (Azadi ka Amrut Mahostav) ஒரு பகுதியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஃபோர்டிஸ் மருத்துவமனையுடன் (Fortis Hospital) இணைந்து மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்கள் 20.09.2021 முதல் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் இன்று (25.10.2021) திருமங்கலம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்றது. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் உட்பட சுமார் 248 நபர்கள் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில், உயரம் மற்றும் எடை, இரத்த அழுத்தம், சீரற்ற இரத்த சர்க்கரை, வெப்பநிலை, துடிப்பு போன்றவற்றிற்கான பரிசோதனைகள் செய்யப்பட்டு அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நடத்தி வரும் இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம்கள் இம்மாதத்தில் 27-ம் தேதி அன்று புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ மற்றும் புரட்சித்தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா புறநகர் பேருந்து மெட்ரோ இரயில் நிலையம், 29-ம் தேதி அன்று பரங்கிமலை மற்றும் பச்சையப்பன் கல்லூரி மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற உள்ளது.

காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறும் இந்த இலவச மருத்துவ முகாமை மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**